1975 நவம்பர் 12]

பாடு. இதைத்தான் மத்திய அரசாங்கத்தில் சொல்லி உற்பத்தி விலைக்கு மேல் இவ்வளவு லாபம் என்று சொல்லி, நிர்ணயிக்கப் பட்ட லாபத்திற்கு மேல் வைத்து விற்கக் கூடாது என்ற வகையில் மத்திய அரசு சட்டம் கொண்டு வந்தால், அதிலே மாநில அரசுக்கு அதிகாரம் இருந்தால் உண்மையிலேயே லாப வேட்டைக்காரர் களைத் தடுக்க முடியும் என்று கூறியிருக்கிறோம்.

Mr. DEPUTY SPEAKER: Next question 318.

(Thiruvalargal A. R. Marimuthu, M. Surendran, P. Soundarapandian and Dr. Hande rose to raise a point of order).

Mr. DEPUTY SPEAKER: The hon. Members can raise the point of order after the questions are over.

Loans for purchase of diesel engines

* 318. Q.—Thiru N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu State Co-operative Land Development Bank has resumed issue of loans for the purchase of diesel engines; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) டீசல் எண்ணெய் தட்டுப்பாடு, விலை உயர்வு ஆகிய காரணங்களால் டீசல் பம்பு செட்டுகளுக்கு நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்குவது 1974 மார்ச் திங்களில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. தட்டுப்பாடு நீங்கி போதிய டீசல் எண்ணெய் கிடைக்கும் நிலை ஏற்பட்டவுடன், டீசல் பம்பு செட்டுகளுக்கு மீண்டும் நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்க அனுமதியளித்து 9—10—1974 இல் அரசு ஆணை பிறப்பித்தது.

திரு. சோ. அழகர்சாமி: மீண்டும் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல கிராமச் சங்கங்களுக்கு வறட்சி காரணமாகக் கடன் வசூலிப்பதை நிறுத்தி வைத்ததன் மூலம் ஓவர் ட்யூஸ் அதிகமாக இருப்பதால் கடன் கிடைக்காத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தச் சங்கங்களுக்கு மீண்டும் கடன்கள் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : ஓவர் ட்யூஸ் இருந்தால் மீண்டும் கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்கிருர்கள். தகுதி பற்றி ஆராய்ந்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : டீசல் இன்ஜின்கள் வாங்குவதற்குக் கடன் வழங்குகிற திட்டத்தோடு ஆயிரம் ரூபாய் சப்ஸிடி கொடுக்கும் திட்டமும் இருந்ததே, அது இப்போது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி: கேள்வியே *அதுதான். அதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.*

சென்னே நகரில் பலமாடிக் கட்டடங்கள்

* *319* **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னே நகரில், கூவம் நதிக்கரை ஓரங்களில் உள்ள இடங்களில் பலமாடிக் கட்டடங்கள் கட்டிடும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) கூவம் ஆற்றங்கரை ஓரத்தில் கீழ்க்குறிப்பிட்ட மூன்று இடங்கள் பலமாடிக் கட்டிடங்கள் அமைக்க வீட்டுவசதி வாரியத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது :—

(1) ஸ்பர்டாங்க் சாலே, சேத்துப்பட்டு.

(2) கிரீம்ஸ் சாலே, எழும்பூர்.

(3) டாம்ஸ் சாலே (அண்ணு சாலே அருகில்).

மேற்கூறிய இடங்களேப் பொதுப்பணித் துறையிடமிருந்து வீட்டு வசதி வாரியத்திற்கு மாற்றுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : இந்த கூவம் நதிக்கரை ஓரங்களில் மூன்று இடங்கள் பலமாடிக் கட்டடங்கள் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். அப்படி பலமாடிக் கட்டடங்கள் கட்டினல் வீட்டுப் பிரச்னேகூட ஓரளவிற்குச் சரிவர நிறைவேறும் நிலே